# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# கற்றல் கையேடு - பரதநாட்டியம்
# தரம் 8

## தவணை 1

❖ **நயத்தல் ,ஆக்கத்திறன்**

1. இயற்கைச்சூழலிலுள்ள விலங்கினங்களை நயத்து அவற்றை பாவனை செய்வர்.
   குரங்கு,மான்,முயல்,நரி,ஒட்டகம்,பாம்பு

❖ **செய்முறை**

1. முஸ்டி, சிகரம், கபித்தம் ஆகிய முத்திரைகளின் விநியோகங்களை அபிநயிப்பர்
2. சிரோபேதங்களை அபிநயிப்பர்
   - சிரோபேதம் என்பது தலையினுடைய அசைவுகள் இவை 09 வகைப்படும்

| பேதம் | செய்முறை | விநியோகம் |
|---|---|---|
| 1. சமம் | தலையை நேராக வைத்திருத்தல் | நாட்டியத்தின் ஆரம்பம் |
| 2. உத்வாகிதம் | தலையை உயரத்தூக்குதல் | உயரத்தில் காணப்படும் பொருட்களைப் பார்த்தல் |
| 3. அதோமுகம் | தலையைக் கீழே குனிந்தபடி வைத்திருத்தல் | வெட்கம் |
| 4. ஆலோலிதம் | தலையை வட்டமாக சுற்றுதல் | மயக்கம் |
| 5. துதம் | தலையை வலம் இடமாக திருப்புதல் | இல்லை எனல் |
| 6. கம்பிதம் | தலையை மேலும் கீழும் அசைத்தல் | அழைத்தல் |
| 7. பராவிருத்தம் | தலையை ஒரு பக்கம் திருப்புதல் | அலட்சியம் |
| 8. உக்ஷிப்தம் | தலையை ஒரு பக்கமாக திருப்பி உயர்த்துதல் | உத்தரவிடுதல் |
| 9. பரிவாஹிதம் | தலையை இருபக்கமும் சிறிதாக அசைத்தல் | மகிழ்ச்சி |

3. பாதபேதங்களை அபிநயிப்பர்
   - பாதபேதம் என்பது பாதங்களின் அசைவுகள் இவை 04 வகைப்படும்.
     1. மண்டலம் - நிற்றல்
     2. உத்ப்ளவனம்- பாய்தல்
     3. ப்ரமரீ - சுற்றுதல்
     4. பாதசாரிகா - நடத்தல்

4. தெய்யா தெய்யி அடவினை அபிநயிப்பர்
   - இவ்வடவின் சொற்கட்டு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
   - இது 04 வகைப்படும்.
   - பயன்படும் முத்திரைகள் - பதாகம், கடகாமுகம், அலபத்மம்
   - 2ஆவது,3ஆவது,4ஆவது சமபாத நிலையில் ஆடப்படுகிறது.

❖ **அறிமுறை**

1. அபிநயத்தின் வகைகள்
   - அபிநயம் என்பது பார்ப்பவர்கள் முன் கருத்தொன்றைக் கொண்டுவருதல் எனப்பொருள்படும்.
   - அபிநயம் 04 வகைப்படும்.(ஆங்கீக அபிநயம், வாச்சிக அபிநயம், ஆஹார்ய அபிநயம், சாத்வீக அபிநயம்)

- ஆங்கீக அபிநயம் அங்கங்களினால் கருத்தைப் புலப்படுத்துவது. (அங்கம்,பிரத்தியாங்கம்,உபாங்கம்)
- வாச்சிக அபிநயம் வார்த்தைகளினால் கருத்தை வெளிப்படுத்துவது. இது 04 வகைப்படும்.
- ஆஹார்ய அபிநயம் ஆடை,ஆபரணங்களால் கருத்தை வெளிப்படுத்துவது. இது 03 வகைப்படும்.
- சாத்வீக அபிநயம் உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாகும். இது 08 வகைப்படும்.

2. அடவுகளின் சொற்கட்டுகளை இசைக்குறியீட்டில் எழுதுவர்.
   - தட்டடவு, நாட்டடவு, தெய்ஹுத்தெய்ஹி, தாதெய்தெய்த, தெய்யா தெய்யி

❖ **கலாசாரப்பின்னணி**

1. தொழில்சார் நடனங்கள்
   - தொழிலை சித்தரித்து ஆடும் நடனம்.
   - தொழில்சார் நடனங்களாவன அரிவிவெட்டு, மீனவர்நடனம், தேயிலைக்கொழுந்து நடனம் என்பன.

அரிவிவெட்டு நடனம் -

- ○ கையில் வளைந்த கத்தியை வைத்துக் கொண்டு ஆடுவர்.
- ○ அரிவிவெட்டு முன் காலத்தில் ஆண்களாலும்,பெண்களாலும் ஆடப்படும்.
- ○ அரிவிவெட்டுதல்,சூடுமிதித்தல்,தூற்றுதல் முதலியனவும் ஆரம்ப செயற்பாடாக உழவு,நாற்று நடுதல்,களையெடுத்தல் என்பனவும் இடம்பெறும்.
- ○ பாடலானது புதிய தானியத்தை வரவேற்பதாகவும் நல்அறுவடை கிடைக்க வேண்டும் எனவும் அமைந்திருக்கும்

மீனவ நடனம் -

- மீனவர்கள் வலைவீசி மீன் பிடித்து திரும்புவதையும் மனைவிமார் உணவு கொடுத்து வீட்டுக்கு அழைத்து செல்வதையும் சித்தரிப்பதாக அமையும்.
- ஆண்கள் சாரம் அணிந்தும், பெண்கள் சாதாரண சேலை உடுத்தியும் ஆடுவர்.
- ஆண்கள் தலையில் ஓலைத்தொப்பி, தலைப்பாகை அணிவர்.
- பாடலமைப்பு ‘‘ஏலேலோ’’ எனும் சந்தத்திற்கேற்ப அமைக்கப்படும்.

தேயிலைக்கொழுந்து நடனம்

- தேயிலைக்கொழுந்தினைக் கொய்து கூடையில் போட்டு அதைத் தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதை சித்தரித்து ஆடப்படுவது.
- பெண்கள் சாதாரண புடவையும், இடையில் கம்பாயமும், தலையில் கோணியும், முதுகில் கூடையும், கையில் குச்சியும் வைத்திருப்பர்.
- கங்காணிமார் பாத்திரம் சித்தரிக்கப்படும்.
- பெண்கள் ரப்பர் வளையல், முத்துமாலை, மூக்குத்தி, நத்து, சிமிக்கிதோடு, காலில் மெட்டி, காற்சங்கிலி அணிவர்.
- இதற்கு தப்பு வாத்தியம் இசைக்கப்படும்.
- மலையக மக்களின் துன்பத்தைப் பிரதிபலிப்பதாய் கங்காணிமார்,கணக்குப்பிள்ளை,தோட்டத்துதுரைமார் பாலியல் சேஷ்டைகள், கிண்டல் செய்வதாக அமையும்.

## தவணை- 2

- ❖ **நயத்தல்**

   1. வேப்பிலை நடனத்தைப் பார்த்து இரசித்தல்.

- ❖ **ஆக்கத்திறன்**

   1. வேப்பிலை நடனத்தினை அம்மனை வேண்டி ஆற்றுகை செய்வர்.

- ❖ **செய்முறை**

5. கடகாமுகம், சூசி, சந்திரகலா, பத்மகோஷம் ஆகிய முத்திரைகளின் விறியோகங்களை உச்சரிப்புடன் அபிநயிப்பர்

**6. திருஷ்டி பேதங்களை அபிநயிப்பர்.**

- திருஷ்டி பேதம் என்பது கண்களின் அசைவுகள்
- இது 08 வகைப்படும்

| பேதம் | செய்முறை | விநியோகம் |
|---|---|---|
| 10. சமம் | கண்களை நேராகப் பார்த்தல் | நாட்டியாரம்பம் |
| 11. ஆலோகிதம் | கண்களை வட்டமாக சுற்றுதல் | மயக்க நிலை |
| 12. சாசி | கண்களை ஒரு பக்கம் பார்த்தல்(கடைக்கண்) | சிந்தனை |
| 13. ப்ரலோகிதம் | கண்களை இரு பக்கமும் பார்த்தல் | இரு பக்கமும் பொருட்களைப் பார்த்தல் |
| 14. நிமீலிதம் | கண்களை அரை விழியாக மூடுதல் | த்யானம் |
| 15. உல்லோகிதம் | கண்களை மேலே பார்த்தல் | மேலே உள்ள பொருட்களைப் பார்த்தல் |
| 16. அனுவிருத்தம் | கண்களை மேலும் கீழும் பார்த்தல் | கோபப் பார்வை |
| 17. அவலோகிதம் | கண்களைக் கீழே பார்த்தல் | வெட்கம் |

**7. கண்டபேதங்களை அபிநயிப்பர்**

- கண்டபேதம் என்பது கழுத்தினுடைய அசைவுகள்
- இவை 04 வகைப்படும்.

| பேதம் | செய்முறை | விநியோகம் |
|---|---|---|
| 1. சுந்தரி | கழுத்தை இரு பக்கமும் அசைத்தல் | நட்பின் ஆரம்பம் |
| 2. திரச்சீனா | கழுத்தை பாம்பு நெளிவது போல் அசைத்தல் | பாம்பு நெளிதல் |
| 3. பரிவர்திதா | கழுத்தை பிறைச்சந்திரன் போல் அசைத்தல் | கன்னத்தில் முத்தமிடல் |
| 4. ப்ரகம்பிதா | கழுத்தை முன்பின்னாக மாடப்புறா போல் அசைத்தல் | முணுமுணுத்தல் |

8. தத்தெய்தாம் 1-3 வரையான அடவுகளை அபிநயிப்பர்
    - இவ்வடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
    - இது 06 வகைப்படும்.
    - பயன்படும் முத்திரைகள்

      சிகரம், பதாகம், அலபத்மம் கடகாமுகம், முஷ்டி, சூசி, திரிபதாகம்
9. தத்தெய்தாஹா 1வது அடவினை அபிநயித்தல்
    - 1வது தத்தெய்தாஹா அடவின் தாளம் ரூபகம்.
    - இவ்வடவின் மறுபெயர் வீச்சடவு ஆகும்.
    - இவ்வடவு 04 வகைப்படும்.
    - இவ்வடவில் திரிபதாக முத்திரை பயன்படும்.

❖ **அறிமுறை**

1. தத்தெய்தாம் அடவினை இசைக்குறியீட்டில் எழுதுவர்.

2. பாத்திர இலட்சணம்

    - நாட்டியப்பெண்ணிற்குரிய பண்புகளை குறிப்பது
    - மன்னர் முதல் மூன்று குலத்துதித்தயள், அன்னம் போன்றவள், பூரணச்சந்திரன் போலவும், பூத்த வஞ்சிக்கொடி போலவும், கார்மேகம் திறந்து மின்னல் வெளிப்பட்டது போல் தோன்றுவாள்.
    - தாளம் சுருதி தவறாமல் பக்தியுடன் மதுர வாசம் பேசி இசைப்பாடலைப் பாடுவாள்.
    - தாளசுர ஞானம், முகமலர்ச்சி உடையவள்

3. அபாத்திர இலட்சணம்

    - நாட்டியப்பெண்ணிற்கு இருக்கத் தகாத குணவியல்புகளை குறிக்கிறது.
    - அபாத்திர தன்மையுடையவள்
    - கல்வியின்மை, கூந்தலை சபை முன்னே கோதி முடிபவள், உடல் சொறிதல், இரு குரலுடைமை, தரையில் விழுந்த ஆபரணங்களைத் தேடுபவள் அபாத்திரமானவள்

4. **அரங்க தேவதாஸ்துதி**

அரங்க தெய்வத்தை வணக்கம் செய்கின்ற பாடல்

ஸ்லோகம் -

பரதகுல பாக்யகலிகே பாவரஸானந்த பரிணதகாரே/

ஜெகதேக மோகனகலே ஐயஜய ரங்காதி தேவதே தேவி//

கருத்து -

பரதகுலத்திற்கு மொட்டுப் போன்றவளும் பாவம்,ரஸம் என்பவற்றால் பாக்கியம் உண்டாகக்கூடிய ஆனந்த சொரூபமானவளும் உலகத்தையெல்லாம் போதிக்கும் கலையாக இருக்கின்ற அரங்க தேவதையே ஜெயம் உண்டாகட்டும்.

❖ **கலாசாரப்பின்னணி**

1. **பரதநாட்டியம்**

- தென்னிந்தியாவில் தோற்றம் பெற்ற நடனம்.
- பரத முனிவரால் கொண்டுவரப்பட்டதாலும், பாவம் இராகம் தாளம் என்பவற்றின் சேர்க்கையாலும் பாரத நாட்டில் தோற்றம் பெற்றதாலும் பரதநாட்டியம் எனப்பெயர் பெற்றது.
- நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் எனும் உட்பிரிவுகளையும் தாண்டவம், லாஸ்யம் எனும் பெரும் பிரிவுகளையும் கொண்டது.
- ஒற்றைக்கை முத்திரைகள் 28 இனையும், இரட்டைக்கை முத்திரைகள் 24 இனையும் கொண்டது.
- சிரோ, திருஷ்டி, கண்ட பேதங்களை உள்ளடக்கியது.
- பரதநாட்டியத்தின் பக்கவாத்தியங்களாக மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், நட்டுவாங்கத்தாளம் என்பன பயன்படும்.
- பரதநாட்டிய உடை பஞ்சகச்சம் ஆகும்.
- அணிகலன்கள் பொன்னிறமான தங்கமுலாம் பூசப்பட்டு, கல்பதிக்கப்பட்டிருக்கும்.
- தலையில் பின்னல், கொண்டை போட்டு மலர்கள் வைக்கப்படும்.
- காலில் சலங்கை அணியப்படும்.

## தவணை- 03

❖ **நயத்தல்**
1. கடற்கரையில் இடம்பெறும் நிகழ்வுகளை இரசித்தல்.

❖ **ஆக்கத்திறன்**
1. வேடனும் புறாவும், கண்ணன் மாடு…. ஆகிய கதைப்பாடல்களுக்கு அபிநயம் அமைத்தல்.

❖ **செய்முறை**
5. சர்ப்பசிரஸ், மிருகஸீர்சம், சிம்ஹமுகம் ஆகிய முத்திரைகளின் விநியோகங்களை உச்சரிப்புடன் அபிநயிப்பர்.
6. தத்தெய்தாஹா அடவு(2-4)
   - 2-4 தத்தெய்தாஹா அடவுகள் ஆதி தாளத்தில் அமைந்துள்ளன.
   - திரிபதாக முத்திரை பயன்படும்.
7. கோலாட்டத்தினைக் கிராமியப்பாங்குடன் பல்வேறு கோலங்களில் ஆடிக்காட்டுவர்.

❖ **அறிமுறை**

1. தத்தெய்தாஹா அடவின் சொற்கட்டினை இசைக்குறியீட்டுடன் எழுதுதல்.
   - இவ்வடவு 04 வகைப்படும்.
   - 1ஆவது தத்தெய்தாஹா அடவின் தாளம் ரூபகம்.
   - ஏனையவை ஆதிதாளத்தில் அமைந்துள்ளன.

**தத்தெய்தாஹா அடவு -1 தாளம் - ரூபகம்**

1ஆம்காலம் 0 $1_4$

தத்,; தெய்,; / தா ; ஹா ; தித்,; தெய்,; //

தா ; ஹா ; / தத்,; தெய்,; தா ; ஹா ; //

தித்,; தெய்,; / தா ; ஹா ; தத்,; தெய்,; //

தா ; ஹா ; / தத்,; தெய்,; தா ; ஹா ; //

2ஆம்காலம் தத்,தெய், தாஹா /தித்,தெய், தாஹா தத்,தெய், தாஹா //

தித்,தெய், தாஹா / தத்,தெய், தாஹா தித்,தெய், தாஹா //

3ஆம்காலம் தத்தெய்தஹதித்தெய்தஹ /தத்தெய்தஹதித்தெய்தஹ தத்தெய்தஹதித்தெய்தஹ //

**தத்தெய்தாஹா அடவு -2,3,4 தாளம் - ஆதி**

1ஆம்காலம் $1_4$ 0 0

தத்,; தெய்,; தா ; ஹா ; / தித்,; தெய்,; / தா ; ஹா ; //

2ஆம்காலம்

தத்,தெய், தாஹா தித்,தெய், தாஹா / தத்,தெய், தாஹா / தித்,தெய், தாஹா //

3ஆம்காலம்

தத்தெய்தஹதித்தெய்தஹதத்தெய்தஹதித்தெய்தஹ/ தத்தெய்தஹதித்தெய்தஹ/ தத்தெய்தஹ தித்தெய்தஹ//

2. இசைக்கருவிகள்

- இசைக்கருவிகள் 04 வகைப்படும்.
    - தோற்கருவி - மரத்தினால் செய்யப்பட்டு தோலினால் மூடப்பட்டிருக்கும்.
      உ+ம்:- மத்தளம், தவில், கெஞ்சிரா, உடுக்கு
    - துளைக்கருவி - மரத்தினால் துளையுடன் செய்யப்பட்டிருக்கும்.
      உ+ம்:- புல்லாங்குழல், நாதஸ்வரம், முகவீணை
    - கஞ்சற்கருவி - உலோகத்தினால் செய்யப்பட்டிருக்கும்.
      உ+ம்:- தாளம், ஜால்ரா
    - நரம்புக்கருவி - மரத்தினால் செய்யப்பட்டு நரம்பு அல்லது தந்திகள் பூட்டப்பட்டிருக்கும்.
      உ+ம்:- வீணை, தம்புரா, வயலின்

3. மங்கள வாத்தியமான நாதசுரம்

- ஆலயங்களிலும் திருவிழாக்களிலும் திருமணங்களின் போதும் வாசிக்கப்பட்டு வருகின்றது.
- இது ஒரு பழமையான காற்று வாத்தியம்.
- தவிலோடு இணைந்து வாசிக்கப்படும்
- நாதசுரத்திற்கு எழில் வயிர் வங்கியம், பெரி வங்கியம் என மறுபெயர்கள் உண்டு.
- இதில் 7 விரல் துளைகளும் அதற்கு சற்று கீழ் தள்ளி 8வது துளையும் இடப்பட்டுள்ளது. 8வது துளைக்கு "பிரம்ம ஸ்வரத்துளை" என்று பெயர்.
- 3, 3 ½, 4, 4 ½, கட்டை நாதசுரத்திற்கு " திமிலி நாதசுரம்" என்று பெயர்.
- 2, 2½ கட்டைக்கு இடையர் என்று பெயர்.
- 2 கட்டை, மத்திம சுருதி நாதசுரத்திற்கு பாரி என்று பெயர்.
- ஆச்சா மரத்தைக் குடைந்து செய்யப்படும்.
- மேல்பகுதி சிறுத்தும் கீழ் பகுதி சிறிது அகன்றும் காணப்படும்.
- நாதசுரம் வாசிக்க "சீவாளி" பயன்படுத்தப்படும்.
- நீண்ட நேரம் மணிக்கணக்கில் இராக ஆலாபனை செய்வதற்கு உகந்த வாத்தியமாகும்.
- இதன் ஒலி கம்பீரமானதாகவும் கனமுள்ளதாகவும் நீண்ட தொலைதூரம் சென்று கேட்கக் கூடிய தன்மையுடையதாகவும் விளங்குகிறது.
- முற்காலத்தில் வெண்கலம், வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களால் செய்யப்பட்டது.
- சந்தனம், கருங்காலி, வேங்கை போன்ற மரங்களாலும் செய்யப்படுகிறது.
- நாதசுரத்தை நாகபட்டினத்திலுள்ள நாகர் எனும் இனத்தைச் சேர்ந்தவர்கள் முதன் முதலில் வாசித்ததாக கூறப்படுகிறது. அதனால் இவ் வாத்தியத்திற்கு நாதசுரம் எனும் பெயர் வந்தது.
- நாதசுரக்கலைஞர்களாக திருவெண்காடு சுப்ரமணியபிள்ளை, திருவிடைமருதூர் பி.வீரசாமிப்பிள்ளை, எஸ்.ஆர். சிவராசா, மதுரை சேதுராமன் ஆகியோரைக் கூறலாம்.

❖ **கலாசாரப்பின்னணி**

1. இலங்கையின் பரதக்கலை
   - இலங்கையில் வளப்பெருக்குச் சடங்கு, மந்திர சடங்குகளுடன் இணைந்து இடம் பெற்ற ஆடல் பின்பு செவ்வியல் நடனமாக விருத்தி கண்டது.
   - இலங்கைத் தமிழர்களுக்கென்று ஒரு தனித்துவமான ஆடல் சிங்கள மக்களுக்குரிய கண்டிய நடனம் போல் இல்லை, ஆனாலும் தென்னிந்தியத் தமிழர்களின் பண்பாட்டில் தோற்றம் பெற்ற பரதக்கலையானது எம்முடன் நீண்டு நிலைபெற்றுள்ளது.
   - திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் போன்ற சிவாலயங்கில் நடனக்கலை இருந்தது.
   - முதலாம் பராக்கிரமபாகு இசை, நடனம் ஆகியவற்றைப் பேணிவந்தான்.
   - இலங்கையில் சோழனின் தலைநகரமாக விளங்கிய பொலனறுவையில் அமைந்துள்ள வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் தேவரடியார் இருந்தனர்.
   - பொலனறுவை, தெவிநுவர இடங்களில் உள்ள சைவ, வைணவக் கோயில்களில் தேவரடியார்கள் இசை, நடனப் பணிகள் செய்தனர் எனக் குறிப்புக்கள் உண்டு.
   - அனுராதபுர அபயகிரி விகாரையில் நடன நிலையில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் சிலை காணப்படுகின்றது.
   - கைலாயமலை நூலில் நடனக் குறிப்புகள் உண்டு.
   - யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கனகி என்னும் தேவதாசி வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் ஒரு நர்த்தகியாக விளங்கினார்.
   - எம்பக்க தேவாலயத்தில் மரசிற்பங்களில் உள்ள நடனமாதர் பரதர் கூறும் பல்வேறு நடன நிலையில் காணப்படுகின்றனர்.

தொகுப்பு - திருமதி மலர்விழி பிறேம்குமார் (ஆசிரியர் யா/இளவாலை திருக்குடும்பகன்னியர்மடம் ம.வி)

திருமதி சிறிதேவி கண்ணதாசன் (ஆசிரியஆலோசகர், மா.க.தி)